உ

சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை

Monthly Journal of Sivapoomi

சிவம்~06 | விசுவாசுவ வருடம் ஐப்பசித் திங்கள் ஐப்பசி ~2025 | பூமி~10




# வடக்கு கிழக்கு மாகாணங்களில் பயனுள்ள தொழிற்சாலைகள் உருவாக வேண்டும்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல பட்டதாரிகள் வேலைவாய்ப்பற்று இருக்கிறார்கள். பட்டதாரிகள் பொதுவாக ஆசிரியர் நியமனத்தை எதிர்பார்த்தும், அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனத்தை எதிர்பார்த்தும் காத்திருக்கிறார்கள். இன்று நமது சனத்தொகை மிகவும் குறைந்து கொண்டு போகின்ற காரணத்தால் திணைக்களங்களுக்கு தேவையான வேலை வாய்ப்புகள் பெரும்பாலும் நிரப்பப்பட்ட நிலையில் அரசு புதிதாக வேலைக்கு நியமிப்பவர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்கு பொருளாதார பிரச்சனை இருப்பதை உணர்ந்து நியமனங்கள் வழங்குகின்ற நிலைமையை பிற்போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையில் பல பட்டதாரிகள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கின்றார்கள் தென் இலங்கையிலும் பல பட்டதாரிகள் வேலைவாய்ப்பற்று இருக்கின்றார்கள்.

இலங்கை முழுவதும் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுடைய எதிர்பார்ப்பு இந்த புதிய அரசாங்கம் தொழில் வாய்ப்பு தரும் என்பதாக உள்ளது. புதிய அரசாங்கம் தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக முயற்சிகள் எடுக்கிறது. எனினும் சம்பளத்தை வழங்குவதற்கான போதிய திரைசேரி வசதி இன்மையை வேலைவாய்ப்புகளை வழங்க முடியாமைக்கான அடிப்படைக் காரணம் ஆகும்.

இந்நிலையில் உண்மையிலேயே வடக்கு கிழக்கை பொறுத்தவரையில் உற்பத்தி திறன் கொண்ட நவீன தொழிற்சாலைகளின் தேவை அவசியம். சாதாரண கடித உறை தொடக்கம் சாதாரண ஒரு சிறிய பை மற்றும் செருப்பு என எந்த பொருளும் தென்னிலங்கை தொழிற்சாலைகளில் இருந்து வந்து கொண்டிருக்கின்றது. எம்மிடையே இன்று ஒரு சவர்க்காரத் தொழிற்சாலை கூட கிடையாது. வருடம் முழுவதும் நித்தமும் பயன்படுத்துகின்ற சவர்க்காரம் 50 மற்றும் 60களில் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்டு பல பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. யுத்தம் காரணமாக மில்க் வைட் தொழிற்சாலை மூடப்பட்டு இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து விட்டது. இன்று எந்த ஒரு சவர்க்காரம் என்றாலும், நித்தமும் மனிதர்கள் தீட்டுகின்ற பற்பசை என்றாலும் சாதாரணமாக நித்தமும் பயன்படுத்தப்படுகின்ற பல

உபகரணங்கள் என்றாலும் தென் இலங்கையில் உற்பத்தியாகி தான் வருகின்றது.

**ஆசிரியர்**
**கலாநிதி. செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்**

**உதவி ஆசிரியர்**
**திரு. ச. சந்தோஷன்**

எனவே வடக்கு கிழக்கில் தகுந்த தொழிற்சாலைகள் இப்பொழுது இல்லை. தொழிற்சாலைகள் நிறுவ வேண்டும் என்றால் உடனே எல்லோரும் பனையை பயன்படுத்தலாம் பனையை பயன்படுத்தலாம் என்று சும்மா பெருமை பேசி காலத்தை வீண்ணடிக்கின்றார்கள். 21 ம் நூற்றாண்டுக்கு பொருத்தமான தொழிற்சாலைகளை நாம் உருவாக்க வேண்டும். அவை நவீன உலகத்துக்கு பொருத்தமாகவும் இருக்க வேண்டும் சந்தைப்படுத்தலுக்கு வசதியாகவும் இருக்க வேண்டும்.

எனவே கற்றிந்த சமூகம், தொழில் வல்லுநர்கள் புதிய தொழிற்சாலைகள் நிறுவுவது தொடர்பாக நல்ல சிந்தனைகளை சமுதாயத்திற்கு எடுத்துரைக்க வேண்டும். புலம்பெயர் சமூகம் இதில் அக்கறை கொள்ள வேண்டும். அருகில் உள்ள இந்திய நாடு எத்தனையோ விதமான தொழிற்சாலைகளை சர்வ உலகமும் அறியக் கூடியதாக இயக்குகின்றது. இந்திய அரசாங்கம் கூட இலங்கையிலே வேலைவாய்ப்பு தரக்கூடிய குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வேலைவாய்ப்பு தரக்கூடிய நல்ல தொழிற்சாலைகளை நிறுவ வேண்டும். வெறுமனே ஹோட்டல்களை அமைப்பதும் புடவை கடைகளை அமைப்பதும் அவற்றை சேல் போடுவதும் வடக்கு கிழக்கின் உடைய நிரந்தர தொழிலாக அமையாது. எனவே விரைவில் நிரந்தரமான தொழில் கூடங்களை அமைக்கும் சிந்தனைகளையும், செய்றபாடுகளையும் அரசியல்வாதிகளும், பொருளாதார வல்லுனர்களும், பல்கலைக்கழகத் துறை சார்ந்த அறிஞர்களும் முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

**கலாநிதி செஞ்சொற்செல்வர்**
**ஆறு.திருமுருகன்**

# ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்திய தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் வைரவிழா நிகழ்வுகள்





தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் 60ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வைரவிழா நிகழ்வானது 11.10.2025 - சனிக்கிழமை மல்லாகம் பழம்பதி தேவஸ்தானத்திலிருந்து கலை கலாசார பண்பாட்டு அம்சங்களுடன் கூடிய நடைபவனியுடன் மாலை 3.30 மணியளவில் ஆரம்பமாகி நிகழ்வுகள் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெற்றது.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத் தலைவர் பொ.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு ஆசியுரையினை மாவை ஆதீன முதல்வர் மகாராஜாஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ சுந்தர செந்தில்ராஜ சிவாச்சாரியார் மற்றும் மருதனார்மடம் ஸ்ரீ அருள்வளர் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரரேஸ்வரக் குருக்கள் ஆகியோர் வழங்கினர்.

இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தர்மகர்த்தா சபைத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தனும், கௌரவ விருந்தினர்களாக நல்லூர் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், வலி வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன், தெல்லிப்பழை பிரதேச செயளாளர் சிவகெங்கா சுதீஸ்ணர் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான குரு சிவப்பிரம்மஸ்ரீ இ.பிரசன்னவதனக் குருக்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.






60ஆவது ஆண்டு நிறைவாக "வைரச்சங்கமம்" எனும் நூல் வெளியீடு செய்யப்பட்டதுடன் வீணைக்கச்சேரி, கோவலன் கண்ணகி நாடகம் மற்றும் தெய்வீக இசைச்சங்கமம் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற்றன.

"சிவபூமி சிற்பி" எனும் வைரவிழா சிறப்பு கௌரவ பட்டம் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களுக்கும், வைரவிழா சிறப்புக் கௌரவம் திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களுக்கும், தேகாந்த நிலை கௌரவம் அமரராகி எம்மை எல்லாம் ஆசீர்வதிக்கும் துர்க்கா துரந்தரி கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும் வழங்கப்பட்டது. பெருமளவு மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வு தெல்லிப்பழையின் ஆன்மீக எழுச்சியை மீண்டும் ஒரு தடவை உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளது.










# வாழ்வில் மறக்க முடியாத இனிய நண்பர்




சிரிக்கச்சிரிக்க கதை பேசி எல்லோரையும் மகிழ்வித்த ஆத்மா மனத்தினால் எவர்க்கும் கெடுதி செய்யாத மனிதர், சைவ போசன வாழ்வு, கணிதத்துறையில் வித்தகன், ஆளுமை மிக்க அதிபர், கவின் கலைகளில் நாட்டம் உடைய கலைஞன், தொண்டுப் பணியில் வல்லவர் என எத்தனையோ இவரைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். இனிப்பேசி பயன் ஏது? வட்டுக்கோட்டை பிரமனாச்சிய தோட்ட கற்பக விநாயகர் ஆலய அறங்காவலர் பரம்பரையில் பிறந்தவர். புகழ் பூத்த சித்த ஆயுள் வேத வைத்தியர் அமரர் புண்ணியமூர்த்தி அவர்களின் புத்திரர்களில் ஒருவர். உயர்ந்த கம்பீர தோற்றம் உடைய திரு. பு. ஸ்ரீவிக்னேஸ்வரன் அவர்கள் எம்மை விட்டுச் சென்று விட்டார்கள். நம்ப முடியவில்லை கடந்த 40

ஆண்டுகளுக்கு மேலாக எனது மூத்த சகோதரனூடாக வந்த நட்பு இன்று வரை தொடர்கிறது. அவரது பிரிவு தாங்க முடியவில்லை.

கனடாவில் நடைபெற்ற உலக திருக்குறள் மாநாட்டிற்கு சென்ற வேளை திடீரென அன்னாரின் மறைவு செய்தி முகநூலில் கண்டு அதிர்ந்து போனேன். அன்று தொட்டு அவரோடு பழகிய நாட்கள் மனதில் ஊசலாடுகிறது. எத்தனை இரவு பகல் இருவரும் பயணம் செய்தோம். இனிமேல் அப்படி ஒருவர் இல்லையே என்ற வேதனை மனதை வருத்துகிறது.

ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் அவரது ஆற்றலை யான் அறிவேன். அவர் அதிபராக பணியாற்றிய பாடசாலைகள் அனைத்திலும் யான் அதிதியாக கலந்து கொண்டிருக்கிறேன். பாடசாலைகளை கலையம்சம் நிறைந்த கலை கோவிலாக இவர் மாற்றி விடுவார். பொன்னாலை வரதராஜ பெருமாள் வித்தியாலயத்தில் சரஸ்வதி தேவிக்கு சிலை எடுத்தார். அன்னை தங்கமா அப்பா குட்டி அம்மையாரை அழைத்து திறப்பித்தார். அந்த பெருவிழா மறக்க முடியாது. நவாலி மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்த வேளையில் அங்கு சோமசுந்தரப் புலவருக்கு சிலை எடுத்து என்னை அழைத்து திறந்து வைத்தார். ஆடிப்பிறப்பை பெருவிழாவாக கொண்டாடினார். பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபராகி பெரும் பணியாற்றினார். பெருந்தெருவில் நுழைவாயில் அமைத்தார். பிரதான மண்டபம் முழுவதும் ஓவியங்கள் வரைந்து திருக்குறள் எழுதுவித்தார். விளையாட்டு மைதானத்தை விஸ்தரித்தார். ஆற்றல் மிக்க ஆசான் கல்வி அதிகாரி ஆனார். குறுகிய காலத்தில் காரைநகர் கல்வி கோட்டம் சிறப்பு பெற்றது. இவரது ஆற்றலைக் கண்டு கல்வி உலகம் போற்றியது.

தனது குலதெய்வமாகிய கற்பக விநாயகர் ஆலயத்தை பெருங் கோவில் ஆக்கினார். சித்திரத்தேர், இராஜகோபுரம், தீர்த்தக்கேணி, மணிமண்டபம், எத்தனை எத்தனை இந்த மனிதரின் அயராத உழைப்பால் எழுந்தன. நோய்வாய்ப்பட்ட நிலையிலும் ஆன்மீக வாழ்வில் இவர் ஆற்றிய பணிகள் பல.

சிவபூமி அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்கள் சந்தித்து விட்டது. ஆரம்பித்த நாள் முதல் அறக்கட்டளையின் இணை செயலாளராக அரிய பணியாற்றினார். ஒவ்வொரு கட்டுமான பணிகள் நடைபெறும் போதும் என்னோடு இரவு பகலாக தங்கி இருந்து பாடுபட்டார் .தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லம் சிறப்புடன்

நடைபெறுவதற்கு இவரது பங்களிப்பு சொல்லில் வடிக்க முடியாது. எனது பிறந்தநாள் விழாக்களுக்கு சிவபூமி மண்டபங்களில் இவரே தலைமை தாங்குவார். சிவபூமி அறிக்கைகள் யாவும் எழுதி ஆவணப்படுத்தினார். சிவபூமி அறக்கட்டளை உள்ளவரை நன்றியோடு என்றும் போற்றப்பட வேண்டிய புண்ணிய ஆத்மா என்றால் தகும்.

அமரர் அவர்களோடு இந்தியாவுக்கு பல தடவைகள் செல்லும் சந்தர்ப்பம் கிட்டியது காசி வரை இருவரும் யாத்திரை சென்றோம். எனது தந்தையின் அஸ்தியை கங்கையில் கரைத்தோம். நாம் விரும்பி சாப்பிடும் உணவு ஒன்றினை கங்கையில் கைவிடுவது வழக்கம். அமரர் கங்கையில் பாயாசத்தை கைவிட்டார். கங்கையாத்திரையின் பின் அமரர் அவர்கள் பாயாசம் சாப்பிட்டதே இல்லை. கொழும்பு, மட்டக்களப்பு,கண்டி என நான் எங்கு சென்றாலும் என்னுடன் வந்து இனிய துணைநலத்தை இனிமேல் எங்கே சந்திப்பேன்.

எங்கள் குடும்பத்தோடு மிக விசுவாசமாக பழகினார். எனது தாய் தந்தையை மிகவும் நேசித்தார். எங்கள் வீட்டு வைபவங்கள் அனைத்திலும் அவரது பங்கும் பணியும் மறக்க முடியாது. இவரது மகன் உமாசுதனின் மிருதங்க அரங்கேற்றத்தை எனது வேண்டுதலின்படி மிகச் சிறப்பாக நடத்தினார். ஒவ்வொன்றும் பசுமையாக உள்ளது. இங்கே எழுதியதை விட அமரர் பற்றிய என் எண்ணங்கள் சுமக்கும் விடயங்கள் ஏராளம். இவற்றை யார் அறிவார்?

இறைவனின் நியதியை யாம் அறியோம். “எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்“ என்ற யோகர் சுவாமியின் வாக்கியம் தான் நினைவுக்கு வருகிறது. மானிட வாழ்வில் நல்ல மனிதனாக அவர் வாழ்ந்து முடித்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அவரின் குல தெய்வத்தையும் துர்க்கை அம்பாளையும் பிரார்த்தித்து அன்னாரின் மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், உறவினர்கள் அனைவருக்கும் ஆறுதல் கூறி அமைகிறேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்,**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை.**
**தலைவர், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பளை.**

# சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்ல முதியோர் விழா

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி உலக முதியோர் தினத்தை முன்னிட்டு சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் சிறப்பான விழா ஒன்று நடைபெற்றது. முதியோர் இல்லத்தில் தங்கியிருந்த அனைத்து மூத்தோரும் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் இவ்விழாவில் கலந்து கொண்டனர். இல்லத்தின் நிர்வாகத்தினரும், நன்கொடையாளர்களும், ஊர் பொதுமக்களும் இணைந்து நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

சிலர் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து அனைவருக்கும் வாழ்க்கைப் பாடமாகக் கற்றுக் கொடுத்தனர். இவ்விழா முதியோரின் மனதிற்கு பெரும் ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அளித்தது. அவர்களை அன்பும் மரியாதையும் உடன் கௌரவித்தது அனைவரின் உள்ளத்தையும் நெகிழச்செய்தது. முதியவர்களை மதித்து கௌரவிக்கும் பண்பாட்டை இளம் தலைமுறைக்கும் எடுத்துக்காட்டியது.









# இணுவிலில் திறந்து வைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடம்

காங்கேசன்துறை வீதியோரத்தில் இணுவில் துரைவீதிச் சந்திக்கு அருகில் அமரர்களான இராசையா இராசம்மா ஞாபகார்த்தமாக அவர்களது குடும்பத்தினரால் பேருந்து தரிப்பிடம் நிர்மாணிக்கப்பட்டது. கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களால் இந்த பேருந்துத் தரிப்பிடம் திறந்து வைக்கப்பட்டது.






# இதய அஞ்சலி



எமது அறக்கட்டளையின் இணைச் செயலாளர் திரு. தயாபரன் மற்றும் எமது பணிகளுக்கு உறுதுணையாக இருந்து வரும் Dr. தீனதயாளன் ஆகியோரின் தந்தையார் அமரர் வைத்திய கலாநிதி மயில்வாகனம் மகேசன் அவர்கள், எம் சமூகத்தின் வளர்ச்சிக்காக தம் வாழ்நாளை அர்ப்பணித்த அரிய நபராகத் திகழ்ந்தார்.

கல்வி, கலை, கலாச்சாரம், மற்றும் மனிதநேயச் சேவைகளில் பலருக்கும் வழிகாட்டியாக இருந்து, தம் பண்பும், பணிவும், அர்ப்பணிப்பும் மூலம் எண்ணற்ற உயிர்களில் மாறாத இடம் பிடித்தவர்.

அவரது மறைவு எமக்குக் கொண்டுவரும் வெற்றிடத்தை நிரப்ப இயலாது. ஆனாலும் அவர் விதைத்த நல்லொழுக்க விதைகள் தலைமுறைகள் தொடரும் வரை மலர்ந்துகொண்டே இருக்கும்..

அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

# எஸ்கோ கலைவிழாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலையின் மாணவர்களின் பங்கு



විශේෂ දරුවන්ගේ කලා උළෙලක් මොරටුවේ

නර්තනාංග ඉදිරිපත් කෙරුණු අයුරු

දරුවන්ගේ විශේෂ අත්කම් නිර්මාණ

දර්ශාන් කාහිල් - මොරටුව

මොරටුව, එගොඩඋයන එස්කො නමැති ස්වේච්ඡා සංවිධානය මූලිකත්වයෙන් විශේෂ සාම කලා උළෙල සහ සම්මාන ප්‍රදානෝත්සවයක් මොරටුව කටුබැද්ද ජනසෙත ශ්‍රවණාගාරයේදී පෙරේදා (28 වැනිදා) පැවැත්විණි.

මෙම අවස්ථාවට නගරාධිපති නිශාන්ත ප්‍රදීනාන්දු, උප නගරාධිපතිනි ප්‍රභාෂිනී වික්‍රමසිංහ, ප්‍රධාන විධායක නිලධාරී විජය කුරුකුලනාථ සහ අධ්‍යක්ෂිකා විශාකා කුරුකුලනාථ දන්තනාරායන, සහකාර ලේකම් අමරා කුරුකුලනාථ ඇතුළු නිලධාරීන් පිරිසක් සහභාගී වී සිටියහ.

මෙහිදී විශේෂ අවශ්‍යතා ඇති දරු දැරියන් ඔවුන්ගේ ගායන, වාදන, නර්තන හැකියාවන් ඉදිරිපත් කෙරිණි.

පැමිණ සිටි පිරිස

2025 அக்டோபர் 01 ஆம் திகதி வெளியாகிய சிங்கள பத்திரிகையில் எஸ்கோ கலைவிழா தொடர்பான சிறப்பு செய்தி இடம்பெற்றது. அதில் எமது கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை மாணவர்களின் படங்களும், அவர்களின் கலை ஆக்கப் பொருட்களும் சிறப்பாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

மாணவர்கள் தங்கள் திறமையையும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்திய விதம் அனைவராலும் பாராட்டப்பட்டது. பல்வேறு வண்ணங்களில் வடிவமைக்கப்பட்ட ஓவியங்கள், கைவினைப் பொருட்கள், மற்றும் மனவளர்ச்சியை ஊக்குவிக்கும் ஆக்கங்கள் கண்காட்சிக்கு வண்ணம்கொண்டுவந்தன.

இவ்விழாவில் மாணவர்கள் மட்டுமல்லாமல், ஆசிரியர்களும் பெற்றோர்களும் பெருமையடைந்தனர். அவர்கள் உழைப்பும் அக்கறையும் மாணவர்களின் வெற்றிக்கு பின்னணியாக இருந்தது. பத்திரிகையில் இடம்பெற்ற சிறப்பு கட்டுரை, மாணவர்களின் திறமைகளை சமூகத்திற்கு எடுத்துக்காட்டி, அவர்களின் திறன் மேம்பாட்டிற்கு ஊக்கமாக அமைந்தது.

சிவபூமி மனவிருத்தி பாடசாலை மாணவர்கள் எஸ்கோ கலைவிழாவில் பெற்ற அங்கீகாரம், அவர்களின் எதிர்காலத்திற்கு ஒளிமிகு பாதையைத் திறந்து வைத்துள்ளது. இத்தகைய நிகழ்வுகள் மாணவர்களின் மனவளர்ச்சியையும் தன்னம்பிக்கையையும் அதிகரித்து, சமூகத்திற்குப் பயனுள்ள குடிமக்களாக உருவாக வழிகாட்டுகின்றன.

# சிவபூமி முதியோர் இல்லத்தில் மஹாளய பூசை வழிபாடு

2025 செப்டம்பர் 17 ஆம் திகதி எமது சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில், இறையடி சேர்ந்த முன்னோர்களின் ஆத்மா சாந்திக்காக மஹாளய பூசை வழிபாடுகள் பக்திப் பூர்வமாக நடைபெற்றன.

முதியோர் இல்லத்தில் தங்கியிருந்த மூத்தவர்கள் அனைவரும் கலந்து கொண்டு முன்னோர்களை நினைவு கூர்ந்தனர்.

முன்னோர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனைகள் செய்யப்பட்டன. இவ் வழிபாடுகளில் இல்ல நிர்வாகத்தினரும், கலந்து கொண்டனர். இவ்வாறு நடைபெற்ற மஹாளய பூசை, முன்னோர்களின் நினைவுகளைப் போற்றுவதோடு மட்டுமல்லாமல், முதியோரின் மனதிற்கு ஆன்மிக ஆறுதலையும் தந்தது.






# தேசிய ரீதியில் சாதனை படைத்த சிவபூமி மாணவச் செல்வங்கள்

தென் மாகாணத்தில் சமூக அறப்பணி செயற்பாடுகள் செய்து வரும் “எஸ்கோ“ நிறுவினத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட மனவளர்ச்சி குன்றிய மாணவர்களின் திறனை வெளிப்படுத்துவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட சித்திர போட்டி மற்றும் குழு நடனத்தில் சிவபூமி பாடசாலை விசேட திறனுடைய மாணவர்களும் பங்கேற்று அதில் இரண்டு போட்டிகளிலும் இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொண்டனர்.

இந்த போட்டியில் இலங்கையில் முழுவதிலும் இருந்தது குழு நடனத்திற்காக 35க்கு மேற்பட்ட குழுக்களும் சித்திரப்போட்டியில் 80க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.









# சிவபூமி அறக்கட்டளையின் அடுத்த தமிழ்ப் பணியாக உருவாகிறது தமிழ் ஆராய்ச்சி நிலையம்

அரசடி வீதி (தட்டாதெரு) யாழ்ப்பாணத்தில் சிவபூமி தமிழ் ஆராய்ச்சி நிலையம் அடிக்கல் நாட்டு விழா விஜயதசமி நாளான இன்று இறைவன் திருவருளினால் கை கூடிவர கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டட வேலைகள் இனிதே ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தமிழ் ஆராய்ச்சி நிலையம்ஈழத்து இலக்கியம் அனைத்தையும் பாதுகாக்கவும் படைப்பாளிகள் பற்றிய தகவல்களை சேர்க்கவும், ஆராயவும் வெளியீட்டு விழாக்கள் நடாத்தவும் நிலையம் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளமை சிறப்பிற்குரியது.

இந்த நிகழ்வில் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் மற்றும் எந்திரி.ச.சந்தோஷன், கவிஞர் சிவசிதம்பரம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.







# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட பேராசியர், பேராசிரியர் பதவி உயர்வுகளுக்குப் பேரவை அங்கீகாரம்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஒருவரைச் சிரேஷ்ட பேராசியரகவும், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஆறு பேரைப் பேராசிரியர்களாகவும் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறையைச் சேர்ந்த ரோசிரியர் ஒருவரைச் சிரேஷ்ட பேராசிரியராகவும், மருத்துவ பீடத்தின் சத்திரசிகிச்சையியல் துறை மற்றும் உடற்கூற்றியல் துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூன்று பேரையும், கலைப்பீடத்தின் புவியியல் துறை, இந்து கற்கைகள் பீடத்தின் சமஸ்கிருதத்துறை மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் விளையட்டு விஞ்ஞான அலகைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரையும் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்கே பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் செப்ரெம்பர் 27 ஆம் திகதி சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் சிரேஷ்ட பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த விவசாய உயிரியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் ஜி. திருக்குமரன், பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த சத்திரசிகிச்சையியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் பாலசிங்கம் பாலகோபி, சிரேஷ்ட விரிவுரையாளரும், சத்திர சிகிச்சை நிபுணருமான சுந்தரமூர்த்தி ஐயர் துரைசாமி சர்மா, உடற்கூற்றியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி துரைரட்ணம் செந்தூரன், புவியியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா, சமஸ்கிருதத்துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா மற்றும்

விளையட்டு விஞ்ஞான அலகின் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சிவநேசன் சபா ஆனந் ஆகியோரின் விண்ணப்ப மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், விவசாய பீடத்தைச் சேர்ந்த ரோசிரியர் ஜி. திருக்குமரன் விவசாய உயிரியலில் சிரேஷ்ட பேராசியரகவும், மருத்துவ பீடத்தைச் சேர்நத சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் பாலசிங்கம் பாலகோபி சிறுநீரகவியலில் பேராசிரியராகவும், சத்திர சிகிச்சை நிபுணர் சுந்தரமூர்த்தி ஐயர் துரைசாமி சர்மா சத்திரசிகிச்சையியலில் பேராசிரியராகவும், உடற்கூற்றியல் துறைத் தலைவர் கலாநிதி துரைரட்ணம் செந்தூரன் உடற்கூற்றியலில் பேராசிரியராகவும்,

புவியியல் துறைத் தலைவர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா புவியியலில் பேராசிரியராகவும், சமஸ்கிருதத்துறைத் தலைவர் கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா சமஸ்கிருதத்தில் பேராசிரியராகவும், விளையட்டு விஞ்ஞான அலகின் தலைவர் கலாநிதி சிவநேசன் சபா ஆனந் உடற்கல்வியியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.








# அராலியில் மழை நீரை சேமிக்க திட்டங்கள்

வானம்தரும் மழையை மண்உயர்த்தி சேமிப்போம். என்னும் கருப்பொருளில் கௌரவ ஆளுநர் வேதநாயகம் அவர்களுடன் பேராசிரியர் பிரதீபராஜா ஒய்வுபெற்ற உடற்கல்வி பணிப்பாளர் குமாரசாமி ஒய்வு பெற்ற அதிபர் சபாரட்ணசிங்கி அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரி அதிபர் பாலமுருகன் மற்றும் உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியசங்கத்தலைவர் தர்மகுமாரன் ஆகியோர் வழுக்கையாறுவழியாக வரும் மழைநீரானது அராலி பாலத்தின் ஊடாக கடலை சென்றடைகின்றது.

இதனால் மக்களுக்கு எந்தப்பயனும் இல்லை என்பதை சுட்டிக்காட்டிய பேராசிரியர் பிரதிபராஜா மேலதிக நீர் கடலுக்கு செல்வதில் எந்த பிரச்சனையும் இல்லை ஆனால் நீரை சேமிக்க வேண்டிய தேவை உள்ளது எனவே அராலி பாலத்தைச்சுற்றி இருக்கும் தரையை ஆழமாக்கி மண் அணை அமைத்து நீரை சேமித்தால் அதனை சுற்றியுள்ள பகுதிகளின் நீர் நன்னீராகும் சிறுபோகம் செய்ய முடியும் நிலம்மாசடையாது பாதுகாக்கப்படும் கோடைகாலத்திலும் கிணறுகளில் நீர் இருக்கும் அதனால் அபகுதியில் உள்ள மக்களுக்கு நீர்ப்பிரச்சனை ஏற்படாது எனத்தெரிவித்தார். ஆளுநர் இச்செயல்பாட்டை ஊக்குவித்ததுடன் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்ததுடன். முதல் கட்டமாக மண் தேவையுள்ளோரை அணுகி மண் எடுப்பதற்கு திட்ட அடிப்படையில் வழிகாட்டுதலின்கீழ் செயல்படக் கூடியவர்களை இனம்காணும்படி தெரிவித்தார்.



# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களின் சிறப்பான ஆசிரியர் தினக் கௌரவிப்பு



ஆசிரியர் தினம் என்பது மாணவர்கள் தங்களின் கல்வி வாழ்வில் வழிகாட்டியாகவும், ஒளிவிளக்காகவும் விளங்கும் ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு சிறப்பான நாளாகும். இந்த அருமையான நாளை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் சமூகத்திற்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாக அமைந்த நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

அவர்கள் தமது பள்ளிக்குள் மட்டுமின்றி, சமூகத்தின் சிறப்பு தேவையுடைய குழந்தைகள் கற்பிக்கப்படும் சிவபூமி மனவிருத்தி பாடசாலை மற்றும் கோப்பாய் மகாவித்தியாலயம் ஆகிய இடங்களுக்கும் சென்று அங்குள்ள ஆசிரியர்களை கௌரவித்தனர். இது அவர்களது கருணை, நன்றி உணர்வு மற்றும் சமூகப் பொறுப்புணர்வை வெளிப்படுத்தும் சிறப்பான செயல் ஆகும்.



சிவபூமி பாடசாலையில் சிறப்பு குழந்தைகளை அன்புடனும் பொறுமையுடனும் கற்பிக்கும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு அனைவருக்கும் ஒரு ஊக்கமாகும். இத்தகைய ஆசிரியர்களை கௌரவித்ததன் மூலம் இந்துக் கல்லூரி மாணவர்கள் “ஆசிரியர்” என்ற மகத்தான சொல்லின் உண்மையான அர்த்தத்தை வெளிப்படுத்தினர்.

இத்தகைய செயல்கள் இளைஞர்களின் மனதில் மனித நேய உணர்வை வளர்க்கும் விதமாகவும், ஆசிரியர் தொழிலின் பெருமையை உணர்த்தும் வகையாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் சமூக அக்கறையுடன் ஆசிரியர் தினத்தை கொண்டாடிய நிகழ்வு, எல்லா மாணவர்களுக்கும் பின்பற்றத்தக்க ஒரு முன்மாதிரி நிகழ்வாகும்.

**“ஆசிரியர் என்பது அறிவின் விளக்கு**
**அவரை மதிப்பது மனிதனின் கடமை.”**







# முள்ளிவாய்க்காலில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன



யுத்தத்தால் மிகுந்த பாதிப்புக்குள்ளான முல்லைத்தீவு மாவட்டம், பல ஆண்டுகளாக சமூக மற்றும் கல்வி வசதிகளுக்காக போராடி வருகின்றது. அந்தப் பின்னணியில், சிறப்பு தேவையுடைய குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு முள்ளிவாய்க்காலில் “சிவபூமி மனவிருத்தி பாடசாலை” ஒன்றை அமைக்கும் புனித முயற்சி தற்போது இனிதே ஆரம்பமாகியுள்ளது.
இந்தப் பெருமைமிகு பணியை முன்னெடுப்பதில் அபயம் அறக்கட்டளை முக்கிய பங்காற்றுகிறது. அவர்கள் வழங்கிய நிதிப் பங்களிப்பின் மூலம் பள்ளிக்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகி, முழு உற்சாகத்துடனும் அர்ப்பணிப்புடனும் நடைபெற்றுவருகின்றன.

சிறப்பு தேவையுடைய குழந்தைகள் சமூகத்தில் சமமாக கல்வி பெறவும் தமது திறமைகளை வெளிப்படுத்தவும் ஏதுவான சூழலை உருவாக்குவது இந்நிகழ்வின் முக்கிய நோக்கமாகும். பள்ளி முடிந்ததும் குழந்தைகள் தன்னம்பிக்கையுடன் சமூகத்தில் தமது இடத்தைப் பெறக்கூடிய வகையில் பயிற்சிகளும் மனவள மேம்பாட்டுத் திட்டங்களும் இப்பள்ளியில் இடம்பெறவுள்ளன.

இந்தப் பணிக்காக உள்ளூர் மக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு நற்பண்புடைய அமைப்புகள் தங்களது ஆதரவையும் பாராட்டையும் தெரிவித்துள்ளனர். கட்டுமானப் பணிகள் விரைவில் நிறைவுபெற்று, முள்ளிவாய்க்காலின் சிறப்பு குழந்தைகளுக்கான ஒளி விளக்காக இந்த பள்ளி விளங்கும் என அனைவரும் நம்பிக்கை தெரிவித்து வருகின்றனர். இது ஒரு கட்டிடம் மட்டும் அல்ல, அன்பும் மனிதநேயமும் கலந்த கல்விக்கான ஒரு புதிய தொடக்கம் என்பது சிவபூமி அறக்கட்டளையின் நம்பிக்கை ஆகும்.



## சிவபூமி அறக்கட்டளையின் அன்னபூரணி வயலில் நெல் விதைப்பு இடம்பெற்றது

எமது சிவபூமி அறக்கட்டளை ஊடாக பலரின் பசி தீர்க்கும் அன்னபூரணி வயலில் 06.10.2025 நல்ல நேரத்தில் எமது அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களினால் வயலில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் விநாயக பெருமானுக்கு பூசை வழிபாடுகளை தொடர்ந்து குறித்த வயல் நிலத்தை எமக்கு அன்பளிப்பு செய்த நன்கொடையாளர் அமரர். நந்தபாலன் அவர்களை நீள நினைந்து வயல் நெல் விதைப்பு நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.





## வடமராட்சியில் ஆறுமுக நாவலர் சிலை திறந்துவைக்கப்பட்டது

வடமராட்சி மேலைப் புலோலி திருநாவலூர் மண்ணில் நாவலர் பெருமான் திருவுருவச்சிலை வல்லிபுரம் வடிவேலு குடும்பத்தின் நிதி உதவியில் நாவலர் சனசமுக நிலையத்தினரின் வழிப்படுத்தலின் கீழ் (26.09.2025) கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களினால் திறந்துவைக்கப்பெற்றது.





# தேசியத் தமிழ் தினப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியின் சாதனை!



அக்டோபர் 4, 2025 அன்று நடைபெற்ற தேசிய மட்டத் தமிழ்த் தினப் போட்டிகளில், யாழ் இந்துக் கல்லூரி மாணவர்கள் சிறப்பான சாதனைகளைப் பதிவு செய்து கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

பிரிவு – 04 இன் தனி நடிப்புப் போட்டியில், செல்வன் திருமயூரன் ஷாமந் தனது அபார நடிப்புத் திறமையினால் நடுவர்களைக் கவர்ந்து இரண்டாம் இடத்தையும் (வெள்ளிப் பதக்கம்) வென்றுள்ளார்.

அதேபோல், பாவோதல் பிரிவு 04 இல், செல்வன் நிஷாந்தன் திருவரேஷ்வர் தனது சிறப்பான ஆற்றலுக்காக மூன்றாம் இடத்தையும் (வெண்கலப் பதக்கம்) பெற்றுள்ளார்.

தேசிய அளவில் பதக்கம் வென்றுள்ள இந்தச் சாதனை மாணவர்களையும், அவர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டுகிறோம். இந்த வெற்றி, அவர்களின் அயராத உழைப்புக்கும், தமிழ் மொழி மீதான ஆர்வத்திற்கும் கிடைத்த அங்கீகாரமாகும். அவர்கள் மேலும் பல சாதனைகளை நிகழ்த்த வாழ்த்துகிறோம்.



# யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மாணவர்களின் சர்வதேச வெற்றி

மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச கணித மற்றும் அறிவியல் ஒலிம்பியாட் (IMSO) 2025 போட்டியில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மாணவர்கள் பங்கேற்று நாட்டின் பெருமையை உயர்த்தியுள்ளனர்.

இந்தப் போட்டியில் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த சிறந்த மாணவர்கள் பங்கேற்ற நிலையில், யாழ்ப்பாண இந்துக் கல்லூ ரி மாணவர்கள் தங்களின் திறமையால் சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளனர்.

ரா. அக்சாத் வெள்ளிப் பதக்கத்தை வென்று பெருமை சேர்த்துள்ளார். ஜே. டெரிக் சனோஜன் மற்றும் அ. அறிவமுதன் ஆகியோர் தலா வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர். இவர்கள் பெற்றுள்ள இந்த வெற்றி, யாழ் இந்து அன்னையின் மணிமகுடத்தை அலங்கரித்து நிற்கின்றது.



# அருள் நிறைந்த கந்தசஷ்டி விரதத்தின் மகத்துவம்



இந்து சமயத்தின், அதிலும் குறிப்பாக முருகப்பெருமானை வழிபடும் கௌமாரர்களின் வாழ்வில், கந்தசஷ்டி விரதம் என்பது மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் வரும் வளர்பிறை பிரதமை திதியில் தொடங்கி, ஆறாவது நாளான சஷ்டி திதி வரை அனுஷ்டிக்கப்படும் இந்த ஆறு நாட்கள் விரதம், வெறும் உணவுத் தியாகம் மட்டுமல்ல அது ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி, உள்ளத்தில் உள்ள ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை அழித்து, இறைவனுடன் ஒன்றிணைவதற்கான ஒரு தவ வாழ்வு. இந்த விரதம் முருகப் பெருமான், அசுரர்களின் அரசனான சூரபத்மனை வென்று, அவனுக்கு அருள்பாலித்த மகா அற்புதமான நிகழ்வைக் கொண்டாடும் ஒரு பெருவிழா ஆகும். முருகனின் ஆறுமுகங்களும், பன்னிரு கரங்களும் கொண்ட ஆற்றல் வெளிப்பட்ட திருநாள் இது.

### சூரசம்ஹாரத் தத்துவம்: மும்மலங்களை வெல்லுதல்

கந்தசஷ்டி விரதத்தின் மையமாக இருப்பது, முருகப்பெருமான் சூரபத்மனை வதம் செய்த சூரசம்ஹாரம் ஆகும். இந்த புராண நிகழ்வு வெறும் சண்டைப் போர் அல்ல் அது ஆத்ம ஞானத்தின் ஒரு தத்துவ விளக்கமாகும்.

* ஆனைமுகச் சூரன்:

மாயை என்னும் பிரபஞ்சத் தோற்றத்தைக் குறிப்பவன். முருகனால் அழிக்கப்படுவது, இந்த உலகப் பற்றுகளில் இருந்து ஆன்மா விடுபடுவதைக் குறிக்கிறது.

* சிங்கமுகச் சூரன்:

கன்மம் என்னும் வினைப்பயனைக் குறிப்பவன். இவனை முருகன் வெல்வது, நாம் செய்யும் நல்ல, தீய வினைகளின் பலன்களில்



இருந்து விடுதலை பெறுவதைக் குறிக்கிறது.

* சூரபத்மன்:
ஆணவம் அல்லது அகந்தை என்னும் “நான்” மற்றும் ”எனது” என்ற செருக்கைக் குறிப்பவன். அசுரர்களின் தலைவனான இவனை சஷ்டி நாளன்று முருகன் வதம் செய்து, தன்னுடைய வேலைப் பிரயோகித்து, அவனைச் சேவல் மற்றும் மயில் ஆக்கித் தன்னுடன் வைத்துக் கொள்கிறார். இது, ஆணவம் அழிக்கப்படுவதால், ஆன்மா இறைவனின் திருவடியில் சரணடைந்து, அவனது வாகனமாகவும், கொடியாகவும் மாறிப் பணி செய்வதைக் குறிக்கும் உன்னத தத்துவமாகும்.



எனவே, இந்த விரதம் மேற்கொள்வதன் நோக்கம், நம் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும் இந்த அசுர குணங்களை அழித்து, தூய அன்பையும் ஞானத்தையும் நிலைநாட்டுவதே ஆகும்.

**விரத அனுஷ்டான முறைகள்**

கந்தசஷ்டி விரதம் பல வகைகளில் அனுஷ்டிக்கப்படுகிறது. விரதமிருப்பவரின் உடல் வலிமை, பக்தி நிலை மற்றும் சூழலைப் பொறுத்து முறைகள் மாறுபடும்.

* முழு உபவாசம் (உண்ணா நோன்பு):
இந்த ஆறு நாட்களும், உணவு மற்றும் தண்ணீர் இன்றி முருகப் பெருமானை மட்டுமே தியானித்து இருப்பது மிகக் கடுமையான, ஆனால் உயர்ந்த விரத முறையாகும்.

* ஒருவேளைப் பழ உணவு:
ஆறு நாட்களும் ஒரு வேளை மட்டும் பால், பழம் போன்ற இலகுவான உணவுகளை உட்கொண்டு விரதமிருத்தல்.

* பால், பழம் மட்டும்:
ஆறு நாட்களும் உணவைத் தவிர்த்து, பால் மற்றும் பழங்களை மட்டும் எடுத்துக் கொள்ளுதல்.

எந்த முறையைக் கடைப்பிடித்தாலும், விரதத்தின் முக்கிய அங்கங்கள் இவைதான்:

* காலை வழிபாடு:
ஆறு நாட்களும் அதிகாலையில் எழுந்து நீராடி, முருகப்பெருமானின் திருவுருவப் படத்திற்கு முன் விளக்கேற்றி, கந்த சஷ்டி கவசம், திருப்புகழ் போன்ற முருகனின் பாடல்களைப் பாடி வழிபடுதல்.

* பகல் உறக்கம் தவிர்த்தல்:
பகல் பொழுதில் உறங்குவதைத் தவிர்த்து, இறை சிந்தனையிலேயே இருப்பது அவசியம்.
* பிரம்மச்சரியம்:
இந்த நாட்களில் பெண்ணாசை உள்ளிட்ட உலகப்பற்றுகளில் இருந்து விலகி, மனதை முழுக்க இறைவனிடத்தில் நிறுத்துதல்.

* சஷ்டி இறுதி நாள்:
ஆறாவது நாளான சஷ்டி அன்று மாலையில், அனைத்து முருகன் ஆலயங்களிலும் நடைபெறும் சூரசம்ஹாரத்தைக் கண்டு தரிசித்தல்.

* பாரணை (விரதம் முடித்தல்):
சூரசம்ஹாரத்தை தரிசித்த பின்பு, அன்று இரவு அல்லது மறுநாள் (ஏழாவது நாள்) காலையில் முருகப்பெருமான் மற்றும் வள்ளி-தெய்வானை திருக்கல்யாண வைபவத்தைக் கண்ட பிறகு, உணவு எடுத்துக் கொண்டு விரதத்தை நிறைவு செய்தல்.
விரதத்தின் பலன்கள்

“சஷ்டியில் இருந்தால் அகப்பை(கருப்பை)யில் வரும்
கந்தசஷ்டி விரதத்தை அனு'டிப்பதால் எண்ணற்ற பலன்கள் கிட்டும் என்று நம்பப்படுகிறது. குறிப்பாக, ”சஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும்” என்ற பழமொழி இந்த விரதத்தின் சிறப்பைக் கூறுகிறது. இதில் “அகப்பை“ என்பது கர்ப்பப்பை (கருப்பை) என்பதைக் குறிக்கும்.



* திருமணமாகி நீண்ட நாட்களாகியும் குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் இந்த விரதத்தை நம்பிக்கையுடன் அனு‘டித்தால், முருகனே குழந்தையாக வந்து பிறப்பார் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை.

* விரதம் மேற்கொள்வதால், ஆணவம் அடங்கி, மனம் தூ ய்மையடைந்து, எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

* உடலுக்கும் மனதிற்கும் புத்துணர்ச்சி கிடைத்து, ஆன்மீக பலம் கூடும்.

* எதிரிகள் மற்றும் தீய சக்திகளில் இருந்து பாதுகாப்பு கிடைக்கும்.

வரவிருக்கும் இந்த கந்தச‘டி விரத நாட்களில், நாமும் மனத்தூ ய்மையுடனும், முழு ஈடுபாட்டுடனும் முருகப்பெருமானை வணங்கி, அவனது அருளையும், ஞானத்தையும் பெற்று, வாழ்வில் சகல நலன்களையும் பெறுவோம். வேலும் மயிலும் துணை!



# மயிலிட்டி சிவபூமி கந்தபுராண ஆச்சிரமத்தில் வாரந்தோறும் ஆயுர்வேத மருத்துவ சேவை




மயிலிட்டி சிவபூமி கந்தபுராண ஆச்சிரமம், அப்பகுதி மக்களின் உடல்நலம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில், இருவேறு மருத்துவ முறைகளை ஒரே இடத்தில் வழங்கி, உன்னதமான சமூக சேவையைத் தொடங்கியுள்ளது. இங்கு ஏற்கெனவே அபயம் அறக்கட்டளை அனுசரணையில் ஆங்கில மருத்துவ சேவை நடைபெற்றுவரும் நிலையில், தற்போது ஆயுர்வேத வைத்தியச் சேவையும் வாரந்தோறும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(15.10.2025) புதன்கிழமை, குறித்த ஆயுர்வேத வைத்தியசாலைச் சேவை ஆச்சிரமத்தில் நடைபெற்றபோது, ஏராளமான பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு பயனடைந்தனர். இயற்கையான மருத்துவ முறையான ஆயுர்வேத சிகிச்சையைத் தங்கள் குடியிருப்புப் பகுதிக்கு அருகிலேயே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்ததையிட்டு மக்கள் மனநிறைவடைந்துள்ளனர்.

இந்த ஆயுர்வேத வைத்திய சேவை வாரத்தின் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் தவறாமல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை பொதுமக்கள் இந்தச் சேவையைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இத்துடன், ஆங்கில மருத்துவச் சேவையும் இங்கு தொடர்ந்து நடைபெற்று வருவதனால், இப்பகுதி மக்கள் சமகால மருத்துவம் மற்றும் பாரம்பரிய ஆயுர்வேதம் ஆகிய இருவேறு மருத்துவ முறைகளின் அனுகூலங்களையும் ஒரே ஆச்சிரம வளாகத்தில் பெற்றுக்கொள்ளும் அரிய வாய்ப்பைப் பெற்றுள்ளனர். உள்ளூர் மக்களின் சுகாதாரத் தேவைகளைக்



கருத்தில்கொண்டு, இந்தத் தொடர்ச்சியான சேவையை சிவபூமி அறக்கட்டளை உறுதிப்படுத்தியுள்ளது.

இத்தகைய அரியதொரு மக்கள் நலச் சேவையை மயிலிட்டி சிவபூமி கந்தபுராண ஆச்சிரமம் ஊடாக வழங்குவதற்கு உறுதுணையாக நின்று ஆதரவளித்த அரச அதிகாரிகளுக்கும், மருத்துவ சேவைக்குத் தொடர்ச்சியாக அனுசரணை வழங்கி வரும் அபயம் அறக்கட்டளைக்கும் ஆச்சிரம நிர்வாகம் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டுள்ளது. அரச மற்றும் சமூக நிறுவனங்களின் ஒத்துழைப்பின் ஊடாகவே இவ்வாறான அத்தியாவசிய சேவைகள் மக்களுக்குத் தங்குதடையின்றி சென்றடைய முடியும் என்பதனை இது எடுத்துக்காட்டுகிறது.

மயிலிட்டி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள், இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, இருவகை மருத்துவ முறைகளின் மூலம் தங்கள் உடல் ஆரோக்கியத்தைப் பேணிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்தச் சேவை இப்பகுதி மக்களின் நீண்டகால ஆரோக்கியத்திற்கு அடித்தளமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.





# தெல்லிப்பழை சந்தியில் கந்தையா தணிகாசலம் ஞாபகார்த்த மணிக்கூட்டுக் கோபுரம் திறந்து வைப்பு!




வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழைச் சந்தியில், அப்பிரதேசத்தின் மைல்கல்லாக அமையவிருக்கும் கந்தையா தணிகாசலம் ஞாபகார்த்த மணிக்கூட்டுக் கோபுரம் (15.10.2025) கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரியின் பழைய மாணவரும், அப் பிரதேசத்தின் சமூகப் பற்றாளருமான திரு. தணிகாசலம் விஜயகுமார் அவர்களது பூரண நிதிப் பங்களிப்புடன், தனது தந்தையாரான அமரர் கந்தையா தணிகாசலம் அவர்களின் நினைவாக இந்த அழகிய மணிக்கூட்டுக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.






நீண்டகாலமாக இந்தச் சந்தியின் அடையாளங்களில் ஒன்றாகத் திகழக்கூடிய ஒரு அம்சத்தின் தேவை உணரப்பட்ட நிலையில், திரு. விஜயகுமார் அவர்களின் இந்தச் சீரிய முயற்சி அப்பிரதேச மக்களின் நீண்டநாள் கனவை நிறைவேற்றியுள்ளது. நடைபெற்ற திறப்பு விழாவில், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, மணிக்கூட்டுக் கோபுரத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தினர், பழைய மாணவர்கள், கிராமத்தின் முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

காலத்தின் ஓட்டத்தை உணர்த்தும் மணிக்கூட்டுக் கோபுரம், தெல்லிப்பழைச் சந்திக்கு ஒரு புதிய பொலிவையும், வரலாற்றில் நீடித்து நிலைக்கும் ஒரு கம்பீரமான அடையாளத்தையும் சேர்த்துள்ளது.





# சிவபூமி திருக்குறள் வளாகத்தை சொல்வேந்தர் சுகிசிவம் ஐயா பார்வையிட்டார்



இந்தியாவின் பிரபல பேச்சாளர் சொல்வேந்தர் சுகி சிவம் அவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்து பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளார்கள். செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களை சந்தித்து அவரோடு சிவபூமி திருக்குறள் வளாகத்தை பார்வையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

தமிழ்நாட்டில் அரசு செய்த சாதனையை அன்பர்கள் துணையுடன் ஆற்றும் ஆறு திருமுருகன் ஆற்றலை வாழ்த்துவதாக குறிப்பிட்டார். தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்கும் விஜயம் செய்து வழிபட்டார். சொல்வேந்தர் சுகிசிவம் ஐயா சிவபூமி அறக்கட்டளையின் ஏனைய பணிகளையும் பார்வையிட்டார்.





16.10.2025

சுகி. சிவம்.

உலகின் உன்னத மொழி தமிழ் என்றால்
தமிழின் உன்னதம் திருக்குறள். சாதி,
மதம், இனம் என்று பார்க்காதவர்கள் கூட
குறள் வழி நிற்றலை பெருமையுடன்.
அந்த ஞான பண்டாரத்தை இவ்வளவு
பொருட் செலவில், அழகு மிளிர கல்வெட்டில்
பதித்து, தமிழ் உணர்வை ஊட்டும் அரும்பணி
ஆற்றியுள்ளார் என் அருமை அன்பர்
திரு. ஆறு. திருமுருகனார் அவர்கள்.
கல்லானாலும், கல்லாத நம்
இதயத்தில் திருக்குறள் அழகாய் இறங்கி
கருத்து மணம் வீசும் நாள் எந்நாளோ
என்று ஏங்குகிறேன்.
அரசு தமிழ்நாட்டில் செய்த சாதனையை
அன்பர்கள் துணையுடன் ஆற்றும் ஆறு. திருமுருகன்
ஆற்றலை வாழ்த்துகிறேன்.
அன்புடன்

